சொன்னதற்கு நன்றி. அப்படி உரை எழுதிய நம்முடைய கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் காஞ்சிபுரத்திலே கந்த புராணத்தை எழுதியிருக்கிறார்களே, அவர்களுக்குத் தருவீர்களா? பரிமேலழகர் காஞ்சியிலே பிறந்த ஒரு அர்ச்சகர் தான். அவருக்கும் நினைவுச் சின்னம் அமைப்பீர்களா? இப்படிப்பட்ட வரலாற்று நினைவுச் சின்னங்களை அமைக்கின்ற முறையை நம்முடைய தமிழக அரசு (மணியடிக்கப்பெற்றது) தமிழைச் சொல்கிறது. ஆகவே சொல்கிறேன். கன்னித் தமிழை வளர்த்திருக்கின்ற சங்ககால அறிஞர்களுக்கு நினைவுச் சின்னம் வகுக்கப்பட வேண்டும். வகுக்கப்படுமா? அப்படி வகுக்கின்றபோது அதில், எழுதிய நூல்களுடைய வரலாற்றைச் சொல்ல வேண்டும். சொல்வீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் தமிழிலேயே கேள்வியாக கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்ட வினாவிற்கு பதில் அளிக்கின்றபோது தெளிவாகச் சொல்லி விட்டேன். சங்கப் புலவர்களுக்கு நினைவுக்கல் நாட்டல் என்ற முறையிலே அது அரசால் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி புலவர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்புகின்றபோது கட்டாயம் அவருடைய வரலாறு பொறிக்கப்படும்.

பாடநூல் நிறுவனத்தால் அச்சிடப்பெற்ற பாடநூல்கள்.

190—(* வினா எண் 10519) **திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு பாடநூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாட நூல்கள் எவ்வளவு?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட காகிதம் எத்தனை டன்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்ற ஆண்டு (1985-86) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாடநூல்கள் 309.98 லட்சங்கள் ஆகும்.

(ஆ) 1985-86க்கு மைய அரசு ஒதுக்கிய சலுகை விலைக் காகிதம் 6,103 டன்கள். ஆனால் காகித ஆலை வழங்கியது 3,310 டன் ஆகும். வெளிச் சந்தையில் வாங்கியது 3,360 டன் ஆகும்.

1987 மார்ச் 26]

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் புத்தகங்கள் வெளியிட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நன்றி. இன்று வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆகஸ்ட் மாதம் அவை விநியோகம் செய்யப்படுவதால்—அம்மாணவர்கள் பள்ளி திறந்த முதல் வாரத்திலேயே புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கி விடுவதால், இலவசப் புத்தகங்கள் சில இடங்களில் விநியோகம் செய்யப்பட்டும், சில இடங்களில் விநியோகம் செய்யப்படாமலும் தேங்கி வீணாக்கப்பட்டும் தவறுகள் ஏற்பட வழி வகுக்கிறது. எனவே, பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் அப் புத்தகங்கள் விநியோகம் செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுகள் ஒன்றும் இதில் நடப்பதற்கு வழி வகை இல்லை. ஆனால் மாணவர்களுக்குக் காலத்தே பாடநூல்கள் சென்று சேராவிட்டால், அது அரசு எண்ணுகிற எண்ணத்தை, பலனை எட்டாமல் போய்விடும். இது அரசினுடைய கவனத் திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு, ஆய்ந்து, இந்த ஆண்டி லிருந்து அப்பிரச்சினை எழாமல் காலத்தே மாணவர்களுக்கு பாட நூல்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் ஐந்து வகுப்புகளுக்கான புத்தகங்கள் அளவில் பெரியதாக இருப்பதாலும், முதல் மூன்று மாதங்களுக்கு மேல் பயன்பட முடியாத நிலையில் கிழிந்து விடுகிற நிலை இருந்து வருவதாலும், இரண்டாவது முறை புத்தகங்கள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை என்பதாலும், அதன் அளவைக் குறைத்து, சிறிய தாக புத்தகங்களை அமைத்து, மாணவர்களுக்கு அது ஓராண்டுக் குப் பயன்படும் அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற் கான ஏற்பாட்டினைச் செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூலின் அளவு, பாடத் திட்டங்களி னுடைய அளவைப் பொறுத்தது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனத்திற்காக தனியான அச்சு இயந் திரங்கள் அமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அரசு மேல்நிலைப் பள்ளிகள்.

191—(*வினா எண் 11100) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் எந்த அடிப்படையில் தொடங்க அனுமதிக்கப்படு கிறது?

(ஆ) அவற்றில் மாணவர்கள் சேர்க்கை எவ்வாறு நடத்தப் படுகிறது?

(இ) எல்லா கல்வி மாவட்டங்களிலும் பரவலாக இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டு இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இடவசதி, தளவாடங்கள், உபகரணங்கள், எம்.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கிற வசதி பொது மக்களின் ஆதரவு, தலைமையாசிரியர்களின் முறையீடு ஆகியவற்றின் அடிப் படையில் மேல்நிலை வகுப்பில் தொழிற்பாடமாக 'இடை நிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு' அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) (1) 15-லிருந்து 25 வரையிலான வயது வரம்பு கொண்ட பெண்கள் மட்டுமே சேர முடிகிற இவ்வகுப்பில், 25 மாணவிகள், பொதுவான இட ஒதுக்கீட்டு விதியின்படி, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தந்த ஆண்டின் ஜூலை 31-ல், வயது கணக்கிடப்படும்.